# பழந்தமிழகத்தின் கடற்கரைப் போர்

*முனைவர் சி. ஆன்சிமோள்*
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி), இணைப்பேராசிரியர்
ஹோலி கிறாஸ் கல்லூரி, நாகர்கோவில்
https://doi.org/10.5281/zenodo.15526484

**முன்னுரை**

*பழந்தமிழர் கடல் சார்ந்த வர்த்தகம், மீன்பிடித் தொழில் மற்றும் கடற்படைத் திறமை ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். சங்க காலத்திலிருந்தே தமிழர் கடற்படையை உருவாக்கி, அவற்றை பாதுகாப்பிற்கும் தாக்குதலிற்கும் பயன்படுத்தினர். வரலாற்று ஆதாரங்கள் மற்றும் இலக்கிய குறிப்புகள் தமிழர் கடற்கரைப் போரின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. தமிழர்கள் மருதம், முல்லை, நெய்தல், குறிஞ்சி, பாலை எனப் பிரிக்கப்பட்ட வாழ்வியல் நிலங்களில் நெய்தல் நிலம் கடற்கரையை உள்ளடக்கியது. இக்கியத்திலேயே பெரும்பாலான கடற்கரைப் போர்கள் நிகழ்ந்தன. புகழ்பெற்ற சேரர், சோழர், பாண்டியர் ஆகிய முவேந்தர்களும் தங்கள் கடற்படையை வலுவாக வைத்திருந்தனர். பழந்தமிழகக் கடற்கரைப் போரின் முக்கியத்துவத்தையும் வரலாற்று நிகழ்வுகளை ஆராய்ந்து இக்கட்டுரையில் விரிவாக காணலாம்.*

**தும்பை போர்**

***"அலங்குகளைப் புரவா ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்புந் தும்பை
ஈனரம் பதின்மரும் பொருதுகளத்து ஒழிய***

***- (புறநானூறு - 2)***

*என்ற பாடல் வரிகள் ஆநிரையைக் கவரவும், பாசறையைக் கைப்பற்றவும் கோட்டையைக் கைப்பற்றவும் மேற்கொண்ட போர்கள் வெட்சி, வஞ்சி, உழிஞை எனப் பெயர் பெற்றன. இருபெரு வேந்தர்கள் தம் படைவலிமையை மாற்றானுக்குப் புலப்படுத்தும் வகையில் நேரில் நின்று இரு பக்கப் படைகளும் மோதிக்கொள்ளும் போர் வகையே தும்பைப்போர் எனப்பெற்றது. தும்பைப்போர் நெய்தல் நிலத்தில் நடைபெற்ற போராகும். தும்பையும் நெய்தலும்*

***தும்பை தானே நெய்தலது புறனே***

***- (தொல்காப்பியம் - 1015)***

*எனும் தொல்காப்பிய நூற்பாவை கூறுகையில் இருவேந்தர் தம் நால்வகைப் படைகளும் ஒன்றோடொன்று மோதும் போரில் போரிடவும் இருவரும் பாசறை அமைக்கவும் தேவைப்பட்ட பரந்தவெளிக்கு மணலும் மணல் சார்ந்த நெய்தல் உலகமே உகந்தது என்பதால் தும்பைப் போர்கள் நெய்தல் நிலத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்தன. அதற்கேற்றவாறு தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் நீண்ட கடற்கரையைக் கொண்டவை ஆகும். ஆகவே, தும்பைப்போர்கள் நெய்தல் நிலக் கடற்கரையில் நிகழ்த்தப் பெற்றன.*

**குறுங்கோழியூர் கிழார் பாடல்**

*சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, பகைவர் புலத்துப் பாசறை அமைத்துத் தும்பைப்போர் புரிந்தகாலத்து, அவனைப் பாடிய குறுங்கோழியூர் கிழார்,*

***"பொலந்தோட்டுப் பைந்தும்பை
மீசையலங் குளைய பனைப்போழ் செரீஇச்
சினமாந்தர் வெறிக்குரவை
ஓதநீரில் பெயர்பு பொங்க
வாய்காவாது பரந்துபட்ட
வியன்பாசறைக் காப்பான***

.

*வேறு புலத்து இறுக்கம் தானைவியாடு*
*சோறுபட நடத்திநீ துஞ்சாங் மாறே*

*(புறம் - 22)*

*எனப் பாடியுள்ளார். இப்புறநானூற்றுப் பாடலால் சேரமான் பகைப்புலத்துத் தும்பைப் போரில் ஈடுபட்டிருந்த போது பாசறை அமைத்துத் தங்கியிருந்த நிலம் நெய்தல் நிலம் என்ற செய்தி தெள்ளத் தெளிவாகக் காட்டப்பெற்றுள்ளது.*

**புராணக்காலப் போர்**

*காந்தள் கண்ணி சூடிய செல்வேளான முருகப்பெருமானுக்கும், சூரனுக்கும் தத்தம் வலிமையைக் காட்டும் நோக்கில் தம் படைகளுடன் போரிட்ட இடம் திருச்செந்தூர் கடற்கரையாகும். மகிசனும் சக்தியும் வலிமையைக் காட்டும் நோக்கில் ஒருவரையொருவர் தம் படைகளுடன் மோதிய இடமும் தற்போதைய மாமல்லபுரக் கடற்கரை ஆகும். சூரன் வலிமையை அடக்கி அழித்த முருகப்பெருமானின் சூரம்ஹாரமும் மகிசனின் வலிமையை அடக்கி அழித்த சக்தியின் மகிசாசுர வதமும் தும்பைப் போர்களே என்பதும் தும்பைப் போர் நிகழ ஏதுவாகிய இடம் நெய்தல் நிலம் என்பதனையும் இவ்விரு புராணகாலப் போர்கள் அறிவிக்கின்றன.*

**மருதமும் - நெய்தலும்**

*சங்ககால ஆட்சியாளர்கள் நெய்தலோடு இணைந்திருந்த மருதநிலத்திலேயே கோட்டையை அமைத்துக் கொண்டனர். பழந்தமிழகப் போர்களில் பெரும்பாலானவை மூவேந்தர்களும் சிற்றரசர்களும் தம்முள் உடற்றிய போர்களே என்பதால் கடலோரப் பாதுகாப்பைவிட நீண்டு பரந்த கடற்கரைப் பாதுகாப்பை இன்றியமை யாததாயிற்று. ஏனெனில் பகைவர் தம் படையுடன் காடுவழியோ அல்லது கடற்கரை வழியோ மட்டுமே எளிதில் நுழைய முடியும். காடுகளில் முள்வேலி அமைத்து தடுப்பு ஏற்படுத்தியமை போன்று கடற்கரையில் திண்மையான கதவுகளுடன் கூடிய வாயிலை அமைத்தனர். மருதநில ஆறும் நெய்தல்நிலக் கடலுடன் கலக்கும் இடத்தில் கடற்கரையில் அகலம் குறுகிக் காணப்படும். வாயில் அமைப்பதற்கு வசதியாகக் குறுகிக் காணப்பெற்ற இவ்விடத்தில் வாயிலை அமைத்தனர். அயல்நாட்டார் கடல்வழி வந்திறங்கினர். நெய்தல் பகுதியும் வேந்தரின் கோட்டை அமைந்திருந்த இப்பகுதியே என்பதால் அவர்க்கும் இந்நெய்தல் நிலப்பகுதியே வாயிலாயிற்று. எனவே இந்நெய்தல் நிலப்பகுதி ‘‘வாயில்’’ என்றே அழைக்கப்பட்டது. இக்காலங்களில் ஆறு கடலுடன் கலக்கும் பகுதியைக் ‘‘காயல்’’ என்றழைக்கிறோம். வாயில் என்ற பெயரே காயல் என மருவியிருக்க வேண்டும்.*

**கடற்கரைப் போர்**

*நம் முன்னோர்கள் நீர் நிலைகளைக் குறிக்க வாய் என்றோ வாயில் என்றோ இணைத்தே பெயரிட்டு வழங்கினர். வாய் என்ற சொல்லிற்கு துவரம் என்றும ‘‘வழி என்றும் பொருளுண்டு. வாய்க்கால், கணவாய், கால்வாய் என்றே நீர்நிலைகளுக்கு பெயரிட்டுள்ளனர். அதுபோன்று அல்வாறான நீர்நிலைகள் அமைந்திருந்த ஊரின் பெயர்களும் வாய், வாயில் என்ற சொல்லை இணைத்தே வழங்கல் பெற்றுள்ளன. சோழ நாட்டின் வெண்மணி எனும் துறைமுகப் பகுதியை ஆண்டு வந்த பரதவர் கோமான் மத்தி தன் பகைவன் எழினியை வென்று அவன் பல்லைப் பறித்து வந்து வெண்மணி வாயிலின் கதவில் பதித்த செய்தியைக் கூறும் மாமூலனார்.*

***‘‘வன்கட் கதவின் வெண்மணி வாயில்’’***

***(அகம் 211:14)***

*எனப் பாட்டில் வரிகள் உறுதி செய்கிறது. தனது வலிமையைப் பொருளாகக் கருதி வந்த வேந்தனை, எதிர்த்துச் சென்று போர் புரியும் இடம் நெய்தல் நிலக் கடற்கரை ஓரமே ஆகும். இருபக்க வேந்தர்தம் நால்வகைப் படைகளும் தம்முன் போரிடத் தேவைப்பட்ட பரந்த இடம் நெய்தல் நில மணற்பாங்கான*

*இடம் என்பதால்தான் தும்பை நெய்தலுக்கு புறனாயிற்று (தொல் 1015). கரிகாற் சோழனும் தன்மேல் படை எடுத்து வந்த வெண்ணி ஊரின் கடற்கரைப் பகுதியான வெண்ணி வாயிலைத் தேர்ந்தெடுத்திருக்கிறான் இப்போரைப் பரணர் வெண்ணி வாயில் போர் எனக் குறித்துள்ளார் (அகம் 246) கடல் பிறக்கோட்டி செங்குட்டுவன் சோழர் குடிக்குரிய மன்னர் ஒன்பது பேருடன் மோதிய பெரும்போர் நேரி வாயில் போர் என்பது புலனாகிறது.*

**முடிவுரை**

*பழந்தமிழகத்தின் கடற்கரைப் போர்கள் தமிழரின் கடல்சார் நாகரிகம், வர்த்தகத்திறன், போர்த்திறமைகளின் சான்றாக அமைகிறது. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு போன்ற நூல்கள் கடற்கரைப் போரின் நிகழ்வுகளை விவரிக்கின்றன என்பதை அறிய முடிகிறது.*